யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

பருத்தித்துறை

"உன்னையே நீ அறிவாய்"

வருடாந்த பரிசில் தின விழா

2014

காலம்	:	28.06.2014 (சனிக்கிழமை)
நேரம்	:	மு.ப 9.00 மணி
இடம்	:	கல்லூரி மண்டபம்

தலைவர்

திருமதி தே.நவரத்தினம்

(கல்லூரி அதிபர்)

பிரதம விருந்தினர்

கௌரவ முதலமைச்சர்

நீதியரசர் க.வி. விக்கினேஸ்வரன்

மகுடவாசகம் (MOTO)

"உன்னையே நீ அறிவாய்"

(Know thyself)

கல்லூரியின்தூரநோக்கு (Vision)

"வடமராட்சிப் பிரதேசத்தில் சைவப் பரம்பரியத்தைப் பேணிப் பாதுகாத்து உயர்நிலைக் கல்லூரியாகத் திகழ்தல்"

(Bea high school protecting the values of Hindu tradition in the Vadamaradchy Zone.)

கல்லூரியின் பணிக்கூற்று (Mission)

"மாறி வரும் உலகின் சவால்களை எதிர்நோக்கக் கூடிய சிந்தனையாற்றலும் செயற்திறனும் ஆளுமையும் கொண்ட மாணவர்களை உருவாக்குவதற்கும் ஆசிரியர்களின் ஆளுமையை வளர்ப்பதற்கும் சமுதாயத்துடன் இணைந்து பௌதீக வளங்களைப் பயன்படுத்தி வினைத்திறன் மிக்க செயற்பாட்டை உருவாக்கல்."

Using the physical resources available and Co-relating with the society achieve a talented performance by enabling the students, thoughts, actions and personality and teachers personality to meet the changing world's challenges.

பரிசளிப்பு வைபவம் - 2014

அதிபர் அறிக்கை -2013

வடமராட்சிப் பிரதேசத்தில் சைவப்பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாத்து வரும் உயர் கல்லூரியாம் எமது பாடசாலையின் பாதுகாவலரான பார்வதி பரமேஸ்வரரின் பாதார விந்தங்களைப் பணிந்து, எமது பாடசாலையின் வருடாந்த பரிசில் தின விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு வடமாகாண முதலமைச்சர் திரு.க.வி.விக்னேஸ்வரன் ஐயா அவர்களே!, சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் கௌரவ கல்வி அமைச்சர் தம்பிராசா குருகுலராசா அவர்களே!, கௌரவ விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு சிவபாதம் நந்தகுமார் அவர்களே!, மாண்புமிகு முதலமைச்சரின் பிரத்தியேக செயலாளர் திரு.ஆ.சுந்தரலிங்கம் அவர்களே! கௌரவ கல்வி அமைச்சரின் இணைச் செயலாளர் திரு.P.சண்முகநாதன் அவர்களே! வடக்கு மாகாண கூட்டமைப்பின் உறுப்பினர்களான திரு.வே. சிவயோகன் அவர்களே! திரு.சு.சுகிர்தன் அவர்களே! பிரதேச செயலர் அவர்களே!நகரசபைத் தலைவர் அவர்களே! பிரதேச சபைத் தலைவர் அவர்களே!கோட்டக் கல்விப் பணிப்பாளர்களே! பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே!, உதவிக் கல்விப் பணிப்பாளர்களே!, ஆசிரிய ஆலோசகர்களே!, அயற் பாடசாலை அதிபர்களே!, ஆசிரியர்களே!, எமது பாடசாலை ஆசிரியர்கள்,கல்விசாரா ஊழியர்கள், மாணவர்களே! பெற்றோர்களே!, பழையமாணவர்களே! நலன்விரும்பிகளே!உங்கள் அனைவருக்கும் எனது இனிய காலை வந்தனங்களைக் கூறி வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

எந்தவொரு நிறுவனமும் வினைதிறனான வெளியீடுகளைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. எமது பாடசாலையும் ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு குறுகிய காலத்தில் விரைவான வளர்ச்சியை ஏற்படத்தியமை கண்கூடு. இரு கண்கள் போன்று பாடப் பெறுபேறும் இணைப்பாடவிதானச் செயற்பாடும் இணைந்த சிறந்த கற்றல் மையமாக எமது பாடசாலை திகழ்கின்றது.

பாடசாலையின் வளர்ச்சியைத் தெளிவுறப் பறைசாற்றும் தினமாக அமைவது பரிசில் தினமே. இத் தினத்தில் கல்வி கேள்விகளில் சிறந்த பெருந்தகைகளை அழைப்பது பாரம்பரியம். இவ்வகையில் எமது பாடசாலைப் பரிசுத் தினத்திற்கு முதன்மை விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் திரு.க.வி.விக்னேஸ்வரன் ஐயா அவர்கள் தமிழ் கூறும் நல்லுகம் செய்த தவப்பயனால் எமக்கு கிடைத்த அற்புதத் தலைவரை இந்து மத தத்துவங்களையும், இசைப்பாரம்பரியத்தையும் தனதாக்கிக்கொண்ட இந்த அற்புதக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் வரவேற்பதில் எல்லையில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் மல்லாகம், சாவகச்சேரி ஆகிய இடங்களில் மாவட்ட நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதியாகவும், "சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் அமைந்ததொருபால் கோடாமை சான்றோர்க்கு அணி" என்ற வான்புகழ் வள்ளுவனின் வாக்கிற்கிணங்க வாழ்ந்து வருபவர் எமது அன்பிற்கும் மாண்பிற்கும் உரிய ஐயா

அவர்கள்.மாண்புமிகு என்ற அற்புதத் தமிழ் வார்த்தைக்கு அழகு சேர்த்தவர். அவர் தமது பதவி ஓய்வின் போது ஆற்றிய பேருரை இன்றும் என்றும் எல்லோராலும் குறிப்பாக உலகலாவிய ரீதியில் பேசப்படுகின்றது என்பது வெளிப்படை. அன்னாரின் அந்த உரை குறித்து இனமத வேறுபாடின்றி அனைவரும் பாராட்டியதை உலகம் என்றும் மறக்காது. அந்த அற்புத உரையானது மனித குலத்தின் மேம்பாட்டிற்காகவும், நீதிதேவதையின் உயரிய தத்துவத்தை உலகிற்கு உரத்து உரைப்பதாகவும் இருந்தது என்பது கண்கூடு.

ஆன்மீகத் துறையில் அன்பு வழி நின்று இந்து மதத்தை இனிய தத்துவங்களை உலகு எல்லாம் பரவ அவர் ஆற்றிய சேவை அளப்பரியது. சமீபத்தில் வெளியாகிய அவரின் உரைத்தொகுப்பு இதற்குச் சான்று பகரும். இந்து நாகரிகத்தின் வழிதனை இறுகப் பிடித்து அதன் வழி பின்பற்றி உள்ளத்தாலும் உடையாலும் உயர்வாக வாழ்ந்து காட்டியவர். அவரது திருக்கரங்களால் பரிசில்களை பெறவிருக்கும் எமது மாணவர்ச் செல்வங்கள் ஒருவகையில் மிகவும் பாக்கியம் பெற்றவர்களே. இந்துப் பாரம்பரியங்களை கட்டிக்காக்கும் எமது அற்புதப் பாடசாலையின் தேவைகளை பூர்த்தியாக்க மாண்புமிகு முதலமைச்சரை தயவுடனும், பணிவுடனும் நாடி நிற்கின்றது வடஇந்து கல்விச் சமூகம்.

நவஜீவனம் என்கின்ற வற்றாத ஊற்றில் இருந்து உற்பத்தியான உத்தமரான மரியாதைக்குரிய மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா அவர்களை பாரம்பரியம் மிக்க இப்பாடசாலை கனிவுடனும், களிப்புடனும் வரவேற்கின்றது.

காலத்தால் அழியாத கல்வியின் கலங்கரை விளக்காகத் திகழும் எமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தம் பெயரில் குரு, குலம் என பழமை வாய்ந்த கல்வி முறையினை பிரதிபலிக்கின்றார். நவஜீவவனத்தில் குருகுல வாசமே முதன்மைப் படுத்தப்படுகின்றது. நவஜீவனத்தில் இருந்து உற்பத்தியாகிய கல்வி ஊற்றுக்கள் இலங்கைத்தீவு முழுவதும் பரவி அன்னாரின் புகழ் பாடிக்கொண்டிருப்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

ஹாட்லியின் மைந்தனாகிய அமைச்சர் அவர்கள் வடஇந்துவின் பாரம்பரியம் பற்றி நிச்சயமாக பூரணமாக அறிந்திருப்பார் என முழுமையாக நம்புகிறேன். காலத்தால் அழியாத இந்தக் கல்லூரியின் இதயக்கதவுகள் அமைச்சர் அவர்களை நோக்கி அகலத்திறந்திருக்கின்றது. தங்களை அன்புடன் வாழ்த்தி வரவேற்கும் அதே வேளை எமது பாடசாலைத் தேவைகளைப் பூர்த்தியாக்க இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதில் தவறேதும் இல்லை என நான் பணிவுடன் நினைக்கின்றேன்.

" மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம் யாவுள முன்னிற்பவை" என இருவரிகளால் உலகளந்த வள்ளுவரின் வாக்கிற்கேற்ப அமைச்சராக விளங்கும் தங்களை இப்பாடசாலைச் சமூகம் என்றென்றும் நினைவில் கொள்ளும் என அன்புடன் தெரிவிக்கின்றேன்.

சரியான முறையில் திட்டமிட்டு செயற்பாடுகளை செயலுற வைக்கும் எமது வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் சிறந்த ஒரு நிர்வாகத்திறன் மிக்கவர். எமது பிரதேசத்தின் கல்வி நிலையை மேம்பாடடையச் செய்வதற்காக இரவு பகல் என்று பாராது அயராது உழைத்துப் பாடுபடுபவர். இன்று எமது வடமராட்சியில் பாட அடைவு மட்ட வீதங்கள் உயர்வடைந்து நிற்பதற்கு காரணகர்த்தாவாக நின்று செயற்படுபவர். பாடசாலைகளின் உயர்வு கண்டு பூரிப்படைபவர் அவர்களை இன்றைய நன்னாளில் எமது பாடசாலைச் சமூகம் களிப்புடனும்

உவகையுடனும் வரவேற்கிறது. இன்றைய இந் நன்நாளுக்கு வருகை தந்தோர் அனைவரையும் வரவேற்று 2013ம் ஆண்டிற்கான அதிபர் அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

எமது கல்லூரியானது வடமராட்சிப் பிரதேசத்தில் தனித்துவம் மிக்க மகளிர் கல்லூரியாக திகழ்ந்து சைவப் பாரம் பரியத்திலும் கல்விச் சாதனையிலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறந்து விளங்குகிறது.

மாறிவரும் உலகின் சவால்களை எதிர் நோக்கக் கூடிய சிந்தனையாற்றலும்,செயற்திறனும், ஆளுமையும் கொண்ட மாணவர்களை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் எமது கல்லூரியின் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கல்வியில் மாத்திரமின்றி இணைபாடவிதானச் செயற்பாடுகளில் பல சாதனைகளை நாம் ஆற்றிவருகின்றோம். குறிப்பாக தமிழ்த்தினப்போட்டி பிரிவு 4 இலக்கணப்போட்டியில் செல்வி நர்மதா பாலச்சந்திரன் அவர்கள் தேசிய ரீதியில் முதலாம் இடம் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார். இவ் வருடமும் தமிழ் தினப் போட்டியில் இருமாணவிகள் தேசிய ரீதியில் பங்கு பற்ற உள்ளமை குறிப்பிடத்தக்கது. 2013 மாகாண மட்ட தமிழ் தினப் போட்டியில் விசேட கூத்து முதலாம் இடத்தையும், தமிழ் அறிவு வினாவிடை இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன

பொதுப் போட்டிகளை நோக்கின் தேசிய கலை இலக்கியப் போட்டி கனிஷ்ட பிரிவு கவிதைப்போட்டியில் செல்வி சங்கவி சிவகுமார் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபை கட்டுரைப்போட்டி மத்திய பிரிவில் செல்வி வேணுகோபாலவாணிதாசன் ஜதிஸ்வரியா தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தை பெற்றதோடு அதே மாணவி பொதுநலவாய உச்சி மாநாடு கட்டுரைப் போட்டி மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

The Royal Society of Chemistry என்ற அமைப்பால் நடத்தப்பட்ட மேற்பிரிவு கட்டுரைப் போட்டியில் எமது பாடசாலையின் உயர்தர விஞ்ஞான கணிதப்பிரிவு மாணவிகள் 7 பேர் தேசிய மட்டத்தில் Marit சித்தியுடன் சான்றிதழ்களைப் பெற்றனர்.

2013 விஞ்ஞான வினாடிவினப் போட்டியில் எமது மாணவி செல்வி உமாசங்கர் சகானா மாகாணமட்டத்தில் முதலாம் இடம் பெற்றார்.

மாகாண மட்ட வணிகப் போட்டி குறுவினாவில் செல்வி விஜித்திரா ஈஸ்வரபாதம், செல்வி நிஜந்தி இராசரட்ணம் ஆகியோர் மூன்றாம் இடத்தைப் பெற்றனர்.

ஆங்கில தினப்போட்டி Role Play இல் தரம் 8 மாணவிகள் மாகாணமட்டத்தில் 3ம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

எமது பாடசாலை பெரு விளையாட்டைப் பொறுத்த வகையில் வலைப்பந்து, உடற்பயிற்சி, சதுரங்க அணிகள் தேசிய ரீதியில் பங்கு பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த வருடம் தேசிய ரீதியில் இம் மூன்று அணிகளும் பங்குபற்ற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மெய்வல்லுனர் போட்டிகளில் நீளம் பாய்தல், முப்பாச்சல், 100m ஓட்டம், ஈட்டி எறிதல் என்பனவற்றிலும் மாணவிகள் மாகாண, தேசிய ரீதியில் பங்கு பற்றி வருகின்றனர். கடந்த ஓரிரு வருடங்களில் எமது மாணவிகள் நீளம் பாய்தல் முப்பாச்சலில் தங்கமும், 100m ஓட்டத்தில் வெண்கலமும், ஈட்டி எறிதலில் வெள்ளிப்பதக்கமும் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கல்விப் பெறுபேறுகளை நோக்கின் 2012ல் 72% வீதமாக இருந்த க.பொ.த. சாதாரண தரப் பெறுபேறு 2013ல் 76% வீதமாக உயர்வடைந்துள்ளது. அப்பெறுபேற்று வீதமானது எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கின்றேன்.

அதே போன்று க.பொ.த உயர்தர கணித, விஞ்ஞான, வர்த்தக, கலைப் பெறுபேறுகளும் சென்ற வருடங்களைக் காட்டிலும் உயர் சித்தி வீதத்தை காட்டி நிற்கின்றது. அத்துடன் மருத்துவத்துறை, பொறியியல் துறைக்கும் பல மாணவர்கள் அணிசேர்த்துள்ளனர். கணிசமான அளவு பல்கலைக்கழக அனுமதியும் கிடைக்கப் பெற்றுள்ளது. .

எமது கல்லூரி கற்றுவல்ல சான்றோரையும் சமூகத்துக்கேற்ற நற்பிரஜைகளையும் உருவாக்கித் தந்து கொண்டிருக்கிறது. சமய ஒழுக்கத்துடன் கூடிய கல்வி கேள்விகளில் சிறந்த நன்மாணவர்கள் உருவாக்கப்படுகின்றனர் என்று சொன்னால் மிகையாகாது

கல்லூரியின் ஆளணி விபரம் - 2013

தரம் 06 – 09 இடைநிலைப் பிரிவு	-	372
தரம் 10 -11 இடைநிலைப் பிரிவு	-	292
தரம் 12 -13 சிரேஷ்ட பிரிவு	-	368
மொத்தம்		1032

ஆசிரிய ஆளணி விபரம் - 2013

அதிபர்	-	01
உபஅதிபர்	-	01
விஞ்ஞான பட்டதாரி	-	08
கலை பட்டதாரி	-	19
வணிகப பட்டதாரி	-	06
பயிற்றப்பட்டவர்கள்	-	23
மொத்தம்	-	58

பகுதி நேர ஆசிரியர் விபரம்-2013

திருமதி.க.வரேந்திரன் (ஆங்கிலம்)

கல்விசாரா ஆளணி விபரம்-2013

ஆய்வுகூட உதவியாளர்	-	01
அலுவலக ஊழியர்	-	01
தோட்டத் தொழிலாளி	-	01
சுத்திகரிப்புத் தொழிலாளி	-	01
காவலாளி (இரவு)	-	01

பற்றாக்குறையான ஆசிரியர்

நாடகமும் அரங்கியலும்	-	01
சித்திரம்	-	01
ஆலோசனை வழிகாட்டல்	-	01
ஆசிரிய நூலகர்	-	01

இடமாற்றம் பெற்றுச் சென்றோர் விபரம்- 2013

திருமதி.பி.யோகச்சந்திரன்

திருமதி.மே.பாலகுமார்

திருமதி.க.பவநந்தி

திரு.K.பிரதீபன்

திருமதி.தே.இந்திரராஜா

ஓய்வு பெற்றுச் சென்றோர் விபரம்- 2013

திருமதி.சுந்தரலிங்கம்

திருமதி.ச.கணேசலிங்கம்

திருமதி.செ.ஜெகநாதன்

திருமதி.ப.ஸ்ரீநாதன்

புதிதாக இணைந்த ஆசிரியர்கள் விபரம் 2013

திருமதி.க.புவனேந்திரம்

திருமதி.ப.நவரட்ணம்

திரு.R.ரமேஸ்

திருமதி.த.சிவானந்தம்

திரு.ஆ.வரதராஜன்

திருமதி.த.சிவமகேஸ்வரன்

திருமதி.ம.கௌரிசங்கர்

திரு.சி.சிவராஜ்

திருமதி.த.கிருஸ்ணராஜா

பழைய மாணவர் சங்க நிதி உதவி பெறுவோர்

நூலக உதவியாளர் - திருமதி சி.லோகேஸ்

விளையாட்டு உதவியாளர் - செல்வி சி.சிந்துஜா

கணனி உதவியாளர் - செல்வி ஸ்ரீ.ஜெசிந்தா

பரீட்சைப் பெறுபேறுகள் -2013

க.பொ.த (சாதாரண தரம்) -2013

விண்ணப்பித்தோர்	-	94
தோற்றியோர்	-	93
க.பொ.த. (உ.த) தகுதி பெற்றோர்	-	70

க.பொ.த (சா.த) முன்னணிப் பெறுபேற்று அட்டவணை

GCE O/L Best Result-2013

No	Name	Result
1	B.Narmatha	9A
2	U.Shahana (Eng. Med)	9A
3	G.Tharsini	8A,C
4	K.Thenuga	7A,B,C
5	T.Sutharsika	7A,B,C
6	M.Mathumangai	7A,B,C
7	J.Jethusha	6A, B,2C
8	R.Mithila	6A,2B,C
9	R.Jathusha	5A,3A,C
10	S.Vishnupirya	5A,2B,2C
11	K.Keerthana	5A,4B
12	S.Keerthana	5A,3B,C
13	P.Praveena (Eng. Med)	5A,4B
14	T.Vasuki	5A,2B,2C
15	V.Uthayapriya	4A,2B,C,S
16	S.Suthashsiny	4A,4B,S
17	S.Sivashthika	4A, B,2C,2S
18	S.Sarmini	3A,4B,2C
19	S.Vishnumeera	3A,2B,4C
20	S.Niruba	3A,4B,C,S

க.பொ.த (சா/த) பெறுபேற்றுப் பகுப்பாய்வு -2013

s.no	Subject	Number Of Students/Sat	Number of A-S	Percentage of pass
1	Saivanery	82	80	98%
2	Catholicism	04	04	100%
4	Chritianity	05	05	100%
5	Tamila Language & Lit	91	80	88%
6	English	91	41	45%
7	Mathematice	91	69	76%
8	History	91	67	74%
9	Science	91	64	70%
	Group 1			
10	Business and Accounting Studies	50	45	90%
11	Geography	21	21	100%
12	Citizenship Education and Governance	20	17	85%
	Group 2			
13	Music	08	08	100%
14	Art	04	04	100%
15	Dancing(Bharatham)	04	04	100%
16	Tamil Literature	27	24	89%
17	Drama	47	47	100%
	Group 3			
16	Information and Communication Technology	26	23	88%
17	Home Economice	06	05	83%
18	Health and Physical Education	59	45	70%

க.பொ.த (உயர்தரம்) –2013 சிறந்த பெறுபேறுபெற்றோர்

விண்ணப்பித்தோர்:	103
தோற்றியோர்:	98
பல்கலைக்கழக தகுதி பெற்றோர்:	79

கணிதப் பிரிவு

1.	பாக்கியராஜன் றூபிஹனுஷா	3A
2.	விவேகானந்தன் மிதுலாயினி	A,2B
3.	கருணாகரன் கிருஸாயினி	3C
4.	நாராயணசாமி ரம்யா	B,2C
5.	கருணாநிதி செந்துஜா	3C
6.	சுபேந்திரன் ஜெயந்தினி	3C
7.	ஜெயபாலன் ஜெனிசா	2C,S
8.	ஜெகதீஸ்வரன் ஜெயப்பிரியா	2C,S
9.	தர்மலிங்கம் தர்மினி	C,2S
10.	சிவசுப்பிரமணியம் தர்மிளா	C,2S
11.	குமாரசாமி சுகீர்த்தனா	3S
12.	செல்வராசா கோபிகா	3S
13.	சுபேந்திரன் சுகன்யா	2B,C
14.	தில்லைநாதன் சரூபி	2B,C
15.	தியாகராஜா ரஜிதா	2B,C
16.	பத்மநாதன் ஜனனி	B,2C
17.	சிவலிங்கம் சுஜீவா	C,2S
18.	தங்கராஜா கஸ்தூரி	B,2C
19.	அருளானந்தம் யூலியட் பிரியா	3S
20.	கஜேந்திரலிங்கம் கஜந்தினி	3S
21.	சிவலிங்கம் துளசி	3S

விஞ்ஞானப் பிரிவு

1.	அருளானந்தம் பிரியங்கா	A,2B
2.	உமாசங்கர் சங்கீதா	A,B,C
3.	கோபாலகுமாரன் தர்மிகா	2C,S
4.	சிவானந்தசெல்வம் ஜெயதக்ஷா	2C,S
5.	நடராஜா ஜீவிதா	2C,S
6.	கவிதரன் கீர்த்தனா	C,2S
7.	செல்வராஜா தர்ஷிகா	A,2B
8.	சிறீரங்கநாதன் தர்ஷிகா	A,2C
9.	கோபாலகுமாரன் தேனிகா	2C,S
10.	கணேசமூர்த்தி பகிந்துஷா	3S

வர்த்தகப் பிரிவு

1.	தவலிங்கம் அபிரா	2A,B
2.	பாலந்திரன் பானுப்பிரியா	A,B,C
3.	சிறீகந்தா சுஜீவா	A,B,C
4.	முருகுப்பிள்ளை அர்ச்சனா	2B,C
5.	தவராசா கிருஸ்ணமீரா	B,2C
6.	கணேஸ்வரன் சுதர்சினி	2B,C
7.	ஜெயக்குமார் அபிஷா	B,2C
8.	வாமதேவன் ஜெயமீரா	B,C,S

கலைப் பிரிவு

1.	கமலேஸ்வரன் கோபிகா	2A,B
2.	தெய்வேந்திரம் சுகிர்தா	2A,B
3.	பன்னீர்ச் செல்வம் மாதங்கி	A,2B
4.	தங்கவேல் தர்சனா	A,B,C
5.	ஜெயரட்ணசீலன் நிரோஜனா	A,2B
6.	கணபதிப்பிள்ளை சுதேந்தினி	A,B,S
7.	அருட்பிரகாசம் ஜனனி	A,B,C
8.	தர்மராஜா தரண்யா	A,2B
9.	குமாரகுலசிங்கம் நிசாந்தினி	A,2B
10.	தங்கவடிவேல் ஜெயரதீபா	A,B,C
11.	ஜெயராஜா ஜெனனி	A,B,C
12.	கிருபாகரன் பிரசாந்தினி	A,B,C
13.	நாகமுத்தன் தனுஜாயினி	A,B,C
14.	பத்மநாதன் ஜனனி	A,B,C
15.	யோகநாதன் வினோதா	A,2C
16.	ஸ்ரீஸ்கந்தராஜா பிரதீபா	A,2C
17.	ஆனந்தராசா கஸ்தூரி	A,2C
18.	கோபி ரஜனி	A,2C
19.	சொர்ணலிங்கம் நளினி	A,2C
20.	அன்ரன் சேனாதிராஜா ஆன்லக்கிகா	A,2C
21.	நகுலேஸ்வரன் ஜனனியா	A,C,S

க.பொ.த (உ/த) பெறுபேற்றுப் பகுப்பாய்வு-2013

S.No	Subject	Applied	Sat	Pass	Percentage of pass
01	Physice	29	28	21	75%
02	Chemistry	29	28	21	78%
03	Biology	12	11	09	81.81%
04	Combine Maths	17	17	14	82.35%
05	Economice	24	24	22	91.67%
06	Geography	27	23	23	100%
07	Political science	05	05	05	100%
08	Logic	23	20	15	75%
09	Home Econamice	04	02	02	100%
10	Business studies	20	20	18	94.73%
11	Accounting	20	20	19	95%
12	Chritianity	02	02	02	100%
13	Hindu civilization	25	21	21	100%
14	Dancing	01	01	01	100%
15	Music	04	04	03	75%
16	Tamil	49	48	44	91.67%
17	History	18	18	18	100%

பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் - 2013

கணிதம்

1. மகேந்திரராஜா கௌசிகா - வசதிகள் முகாமைத்துவம்
2. தில்லைநாதன் சரூபி - கணனி விஞ்ஞானம்
3. தியாகராஜா ரஜிதா - பௌதிக விஞ்ஞானம்

விஞ்ஞானம்

1. செல்வராஜா தர்ஷிகா - உணவுத் தொழில் நுட்பம்
2. சிறீரங்கநாதன் தர்ஷிகா - உணவு பதனிடல்
3. ஜெகதீசன் கீர்த்தனா - விலங்கியல் விஞ்ஞானம்

கலைப்பிரிவு

1. சிறிதரன் நிவேதா
2. பத்மநாதன் சரண்யா
3. அரியரட்ணம் ஆரணி
4. செந்தில்நேசன் கௌசிகா
5. சிறிகாந்தா மகாயினி

நுண் கலை

1. குமாரகுலசிங்கம் நிசாந்தினி
2. சொர்ணலிங்கம் நளினி
3. நாகேந்திரன் துர்க்கா
4. பிரன்சிஸ் பிரமிளா எலிசின்

எமது கல்லூரியில் இயங்கும் மன்றங்கள்

இந்துமன்றம்

சைவப்பண்புகளை மாணவர்களிடையே வளர்க்கும் நோக்கில் இம்மன்றச் செயற்பாடுகள் அமைகின்றன. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பஞ்சபுராணம், சிவபுராணம், கந்தரனுபூதி என்பன ஓதப்படுவதுடன் பஜனைப்பாடல்களையும் மாணவர்கள் பாடுவதற்கு இவ்மன்றம் மாணவர்களுக்கு வழிகாட்டுகிறது. மேலும் வருடந்தோறும் தைப்பொங்கல்,சிவராத்திரி,நவராத்திரி விழாக்கல் கொண்டாடப்படுவதுடன் நாயன்மார்களின் குருபூசை தினங்களும் கொண்டாடப்படுகின்றன. இத்தகைய விழாக்களால் மாணவர்கள் தம் வாழ்வில் சமயப்பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ள வழி காட்டப்படுகின்றது.

தமிழ்மன்றம்

இம்மன்றம் ஒரு பாடசாலைத் தவணையில் இரு முறை கூடுகின்றது.மாணவர்களிடம் மறைந்திருக்கும் திறன்களை வெளிக்கொணர மாணவர்கட்கு மன்றம் வாய்பளிப்பதால் மாணவர்களின் திறன்களை பாட ஆசிரியர்களாலும் மற்றவர்களாலும் இனம் காணமுடிகின்றது .இம் மாணவர்கள் தமிழ்த்தினப்போட்டிகளிலும்
ஏனைய போட்டிகளிலும் பங்கு கொண்டு முகம் கொடுக்க இம்மன்றம் பெரிதும் உதவுகின்றது.

ஆங்கிலமன்றம்

மாணவர்களின் பேச்சு, உரையாடல், நாடகம் நடித்தற் திறன்களை விருத்தி செய்வதற்கு இம் மன்றம் வழிகாட்டுகின்றது. எதிர்காலத்தில் மேலான ஆங்கில மொழியறிவினை மாணவர்கள் கொண்டிருப்பதற்கும் கூச்சமின்றித் தம் திறன்களை வெளிப்படுத்துவதற்கும் இம்மன்றமச் செயற்பாடுகள் துணைபுரிகின்றன. இதனால் ஆங்கில தினப்போட்டிகளில் மாணவர்கள் திறம்படப் பங்கு கொள்ள முடிகின்றது.

சுகாதார மன்றம்

உடற்பயிற்சியினை வழங்கி மாணவர்களைக் கற்றலுக்குத் தயாராக்கும் செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் தனிநபர் சுத்தம், சுற்றாடல் சுத்தம் போன்றவற்றினையும் மேன்படுத்தும் நோக்கமாக இம் மன்றம் இயங்குகின்றது. இம் மன்றத்தின் ஊடாக ஒழுங்கமைக்கப்படும் வலைப்பந்து, கரப்பந்து, சதுரங்கம், உடற்பயிற்சி, கபடி போன்றவற்றால் பாடசாலை, கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் என்ற நிலைகளில் மாணவர்களின் சாதனைகள் நீண்டு செல்கின்றது.

கணித விஞ்ஞான மன்றங்கள்

அறிவியல் உலகின் சவால்களுக்கு முகம் கொடுத்து வாழும் திறன் வாய்ந்த மாணவர்களை உருவாக்குவதற்கு இம்மன்றம்ச் செயற்பாடுகள் மாணவர்களுக்கு வழிகாட்டுகின்றன. கணித விஞ்ஞான புதிர் போட்டிகளுக்குப் பாடசாலை மாணவர்கள் தயாராவதற்கு இம் மன்றம் துணைபுரிகின்றது.

சமூகவியல் மன்றம்

வரலாறு, புவியல், குடியுரிமைக்கல்வி போன்ற துறைகளில் மாணவர்களின் அறிவினை விருத்தி செய்து மேம்பாடடைய இம்மன்றம் உதவுகின்றது. அத்துடன் மாணவர்களைச் பொருத்தப்பாட்டுடன் வாழ்வதற்கு இம் மன்றம் தயார்படுத்துகின்றது.

அழகியல் மன்றம்

மாணவர்களின் நயக்கும் ஆற்றலை மேன்படுத்துவதுடன் கலைத்திறன் களையும் வெளிக் கொண்டு வரும் களமாக இவ் மன்றம் அமைந்துள்ளது. நவராத்திரி, சிவராத்திரி காலங்களிலும் மற்றும் விசேட காலங்களிலும் மாணவர்கள் விழா நிகழ்வுகளில் பங்கு கொண்டு தம் திறமையை வெளிக்காட்ட மாணவர்கட்கு அழகியல் மன்றச்செயற்பாடுகள் துணைபுரிகின்றது.

கிறிஸ்தவமன்றம்

சைவப்பாரம்பரியம் மிக்க பாடசாலையாக அமைந்தாலும் பாடசாலையில் கற்கும் கிறிஸ்தவ மாணவர்களும் தமது சமய ஆற்றல்களை வெளிப்படுத்தும் களமாகக் கிறிஸ்தவ மன்றம் அமைகின்றது. வருடம் தோறும் ஒளிவிழாக்களை இம்மன்றம் சிறப்பாகக் கொண்டாடுகின்றது.

மனைப்பொருளியல் மன்றம்

மாணவர்களின் கைவினைத்திறன்களை விருத்தி செய்து சிறந்த எதிர்கால வாழ்வினை வாழ்வதற்கு இம்மன்றம் வழிகாட்டுகின்றது. விழாக்களின் போது இம் மன்ற மாணவர்களின் சிறப்பான செயற்பாடுகள் பலராலும் போற்றப்படுவன.

சாரணியம்

மாணவார்களிடையே சேவை மனப்பாங்கினை வளக்கும் நோக்கில் இம்மன்றம் செயற்படுகிறது. பாடசாலையில் நடைபெறும் விழாக்களில் ஒழுங்கு கட்டுப்பாடுகளைப் பேணுவதற்கு இம்மன்ற மாணவர்கள் உதவுகின்றனர். சாரணியம் சார்ந்த பாசறைகளில் மாணவர்கள் பங்குபற்றுவதுடன் சாரணியம் சார்ந்த விழாக்களும் இம்மாணவர்களால் கொண்டாடப்படுகின்றன. மேலும் பாடசாலைச் சிரமதானப் பணிகளிலும் இம் மாணவரின் பங்கு குறிப்பிடத்தக்கது.

உயதர மாணவர் மன்றம்

பாடசாலையின் க.பொ.த உயர்தரத் தர வகுப்பிற் கற்கும் கலை, விஞ்ஞானம், வர்த்தகப்பிரிவு, மாணவர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு பொறுப்பாசிரியர்களின் வழிகாட்டலில் சிறப்பாக இயங்குகின்றது. இம்மன்ற மாணவர்களால் வருடந்தோறும் நிகழ்த்தப்படும் ஒன்று கூடலில் மாணவர்களின் ஆக்கத்தினை வெளிக்கொணரும் வகையில் "இந்து விழிகள்" சஞ்சிகை வெளியிடப்படுகின்றது. இச்சஞ்சிகை வெளியீடானது மாணவர்களில் மறைந்திருக்கும் திறனை வெளிக் கொண்டு வருவதுடன் பாடசாலையின் சிறந்த அடைவுமட்டங்களையும் உள்ளடக்கி வெளிவருவதால் மன்ற அங்கத்தவர்களை சிறந்த அடைவு மட்டத்தினைப் பெறத் தூண்டு கோலாகவும் அமைகின்றது.

நூலக மன்றம்

மாணவர்களின் கற்றற் செயற்பாட்டிற்கு உதவும் வகையில் சிறந்த நூல்களை உள்வாங்கி இம் மன்றம் இயங்குகின்றது. காலந்தோறும் பலரின் ஒத்துழைப்பினாலும் அமைப்புக்களின் அர்ப்பணிப்பாலும் புதிய நூல்கள் கிடைக்கின்றன. நூலகவாரத்தில் 2013 ம் ஆண்டின் செயற்பாடாக வாசிப்பு மாத கண்காட்சி இரு நாட்களாக நடைபெற்றது. இதன் போது நூலகத்தில் உள்ள நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டன. 2013ம் ஆண்டு திரு.நா.பாஸ்கரன் (பிரபல சமூக சேவையாளர்) அவர்களால் புதிய நூல்களின் கொன்வனவுக்கென ரூபா 50,000 (ஐம்பதினாயிரம்) வழங்கப்பட்டு நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இம் மன்றத்தின் செயற்பாட்டிற்கும் நூலகத்திற்கும் பொறுப்பாக நூலகர் ஒருவரைப் பழைய மாணவ சங்கம் நியமித்துள்ளது.

சுற்றாடல் படையணி

பாடசாலையின் சுற்றுச் சூழலின் தூய்மையைப் பேணுதலும் பசுமை அழகினைப் பேணுதலும் ஆகிய செயற்பாடுகளில் இக் குழு பணியாற்றுகின்றது.

பாடசாலையில் இயங்கும் அமைப்புக்கள்

பழைய மாணவர் சங்கம்

பழைய மாணவர் தாய்ச்சங்கத்துடன் கொழும்பு, அவுஸ்ரேலியா, கனடா, லண்டன் ஆகிய கிளைச்சங்கங்கள் இணைந்து பாடசாலைக்குத் தேவைப்படும் உதவிகள் பலவற்றினையும் காலம் அறிந்து செய்து வருகின்றன. மாணவ அடைவுமட்ட முன்னேற்றமே பாடசாலை முன்னேற்றம் என்பதனை மனத்திலிருத்திக் கற்றலில் திறமையுடைய பொருளாதாரப் பின் புலம் குறைந்த மாணவர்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்கு மாதாந்தம் பொருளாதார உதவி வழங்கப்படுகிறது. மேலும் வருடாந்தப் பரிசளிப்புவிழாவில் க.பொ.த உயர்தரத்தில் திறமையான மாணவர்கட்கு திரு.கணேசலிங்கம் நரேந்திரன் நிதியத்தில் இருந்தும், திருமதி.மகேஸ்வரி இராசரத்தினம் நிதியத்திலிருந்து தரம் 6-11 திறமையுடைய மாணவர்கட்கும், திருமதி சரஸ்வதி தியாகராஜன் நிதியத்திலிருந்து விசேட தேவைக்குரிய க.பொ.த உயர்தர பல்கலைக்கழகம் செல்லும் முதல் நிலை கலைப்பிரிவு மாணவிக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டு மாணவர்கள் பாராட்டப்படுகின்றனர். அத்துடன் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை ஊடாக ஞாபகார்த்த பரிசில்களும் சிறப்புப் பரிசில்களும் மாணவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது.அரச பொதுப் பரீட்சைகளில் சிறந்த அடைவு மட்டங்களைப் பெறும் மாணவிகளுக்கு பல வகையான நிதியங்களில் இருந்து பழையமாணவர் சங்கம் பரிசில்களை வழங்கி வருகின்றது. பாட அடைவு மட்டங்களில் மட்டுமல்லாது இணைபாட விதானச் செயற்பாடுகளான தமிழ்த்தினப்போட்டி, ஆங்கிலதினப் போட்டி, விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றிக்கும் வருடா வருடம் பெரும் தொகையினை இச் சங்கங்கள் முதலிடுகின்றன. குறிப்பாக லண்டனில் வசிக்கும் திருமதி. கிருஷாந்தி மகேந்திரன் அவர்கள் ஆங்கில தினப் போட்டிக்கான மாணவர்களுக்கான மாகாண தேசிய மட்டச் செலவுகளை மேற்கொள்கின்றார். மேலும் வசதி தேவைப்படும் 22 மாணவர்களிற்கு கனடாக்கிளை பழைய மாணவர் சங்கத்தினரால் ஊக்குவிப்பு நிதி வழங்கப்படுகிறது. பழையமாணவியான கனடாவைச் சேர்ந்த திருமதி தங்கமணி முத்துக்கிருஷ்ணன் என்பவரால் க.பொ.த (உ.த) உதவி தேவைப்படும் மூன்று மாணவர்களுக்கு நிதி உதவியும் பழையமாணவியான திருமதி செ. ஜெகநாதன் அவர்களால் இரு மாணவிக்கு நிதி உதவியும் வழங்கப்படுகின்றது.

கொழும்பு பழைய மாணவர் சங்கக்கிளையினர் பாடசாலையின் நூலகர், விளையாட்டுப் பயிற்சியாளர்,கணனி உதவியாளர் ஆகியோரிற்கான சம்பளக் கொடுப்பனவினை மேற்கொள்கின்றனர். இத்துடன் அமையாது பௌதிக வளச் செயற்பாட்டு விருத்தியிலும் இச் சங்கம் அளப்பெரும் பணியை ஆற்றிவருகின்றது. 2013ம் ஆண்டின் பாடசாலையின் நீண்டகாலத்தேவையாக அமைந்த துவிச்சக்கரவண்டித் தரிப்பிடத்தினை அமைத்து இச்சங்கம் பேருதவி புரிந்ததுள்ளது. மேலும் விஞ்ஞான ஆய்வு கூட மேல்மாடிக்கு ஒலி, ஒளி சாதனப் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் யன்னல்களுக்கு கண்ணாடி பொருத்தி கற்றலுக்கு உதவியாக மாற்றி அமைத்து உதவி புரிந்துள்ளனர். பாடசாலை முழுவதற்கும் வர்ணப்பூச்சு பூசி அழகூட்டியுள்ளனர். இன்னும் விஞ்ஞானத்துறை மாணவர்களுக்கு அவசியம் தேவைப்பட்ட விஞ்ஞான உபகரணங்களைப் பெற்றுத்தந்துள்ளனர். .குறிப்பறிந்து காலமறிந்து அவர்கள் செய்யும் சேவைக்கு எமது பாடசாலைச் சமூகம் என்றென்றும் நன்றியுடையது.எமது பாடசாலை பழைய மாணவர் தாய்ச் சங்கமானது வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள க.பொ.த.உயர்தர விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளை வழங்குகின்றது. க.பொத.உயர்தர, க.பொ.த சாதாரணதர உயர் பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களுக்கும் மற்றும் தேசியமட்டத்தில் முதன்நிலை மாணவர்களுக்கும் ஊக்குவிப்பு நிதிகளை வழங்குகின்றது. தற்காலத்தில் ஆவணப்படுத்தல் நடவடிக்கைகள் பெரிதும் வரவேற்கப்படுவதால் அதன் பொருட்டு மடிக்கணனி ஒன்றும். புகைப்படக்கருவி ஒன்றும் லண்டன் கிளையினரால் வழங்கப்பட்டுள்ளது. இவை தவிர மாவட்ட, மாகாண, தேசிய மட்ட விளையாட்டு தமிழ்த்தினப் போட்டிகள் யாவும் சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு நல்கிறது. எமது பாடசாலையின் பழைய மாணவர்களின் இத்தகைய செயற்பாடுகளினால் பாடசாலை அபிவிருத்தியில் முன்னேற்றம் அடைந்து வருகின்றது என்பதில் ஐயமில்லை.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்

பாடசாலையினை அபிவிருத்திப்பாதையில் இட்டுச் செல்லப் பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. மாணவர்களின் கல்வி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் முன்னேற்றம் காண்பதற்காக உதவி புரிகின்றனர். மாணவர்களின் மதியபோசனம் வழங்கல் சிறப்புற அமைய தம்மாலான பங்களிப்பினை வழங்குகின்றனர். பாடசாலையில் இடம் பெறும் விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா, ஆசிரியர்தின விழா போன்ற நிகழ்வுகள் சிறப்புற அமைய உடனிருந்து உதவுகின்றனர். பாடசாலையில் மாணவர்கள் சிறப்பாக கற்பதற்குரிய சூழல் சிறப்பாக அமைய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் இவர்கள் விசேட கவனம் செலுத்துகின்றனர். இதன் பொருட்டு ஆசிரிய ஆளணி வளம் பெறுவனவு தொடர்பாக இவர்கள் அக்கறைகாட்டுகின்றனர். இன்னும் பாடசாலைச் சுற்றுச்சூழல் தூய்மையின் பொருட்டு இவர்கள் சிரமதானப்பணிகளையும் ஒழுங்கமைத்து மேற்கொள்கின்றனர்.

மேலும் பாடசாலை நலன் விரும்பிகளான திருமதி இந்திராணி பாஸ்கரன் நிதியத்திலிருந்து க.பொ. உயர்தரத்தில் துறைசார் ரீதியில் முதனிலை மாணவிக்கான பரிசில் வழங்கப்படுகிறது. மகேஸ்வரி வேலாயுதம் நிதியத்திலிருந்து தரம் 5 புலமைப்பரிசிலில் சித்தியடைந்து எமது பாடசாலைக்கு வரும் மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படுகிறது.

பாடசாலைக்கு கிடைத்த அன்பளிப்புக்கள் 2013

1. திருமதி வசந்தமலர் நாகேந்திரம் முன்னாள் ஆசிரியர்	அலுவலக அலுமாரி
2. திரு பாஸ்கரன் பிரபல சமூக சேவையாளர்	50,000பெறுமதியான நூல்கள் 2 மின் விசிறிகள்
3. திருமதி ராஜேஸ்வரி மாணிக்கவாசகர்	மின் விசிறிகள்
4. சிங்கர் கம்பனி	DVD Player
5. பழைய மாணவர் சங்கம் லண்டன்	மடிக் கணினி புகைப்படக் கருவி

பாடசாலையில் நடை பெற்ற செயற்றிட்டங்களும் வேலைகளும் - 2013

பாடசாலை சுய மதிப்பீடு
தர உள்ளுட்டு நிதி நுகர் பொருள் மூலம் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வினைத்திறனுடன் முன்னெடுத்துச் சென்றமை அழகியல், விஞ்ஞான, உடநலச் செயற்பாடுகளுக்கான உபகரணக் கொள்வனவு செய்யப்பட்டமை நீர்வழங்கல், குழாய் பழுதுபார்த்தல், மின்சாரம் தொடர்பான சிறு திருத்தங்கள் மேற்கொண்டமை ஆசிரியர், மாணவர் உயர்கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை

H.O.P ஆசிரிய மட்டச் செயற்பாடுகள் 2013

- 28.05.2013 சதுரங்கப் பயிற்சி
- 23.07.2013 மனைப் பொருளியல் பற்றிக் அச்சுப்பதிப்பு
- 02.08.2013 Mother Srilanka Run Project விழிப்புணர்வு கருத்தரங்கு
- 02.08.2013 மனைப்பொருளியல் நவீன உபகரணம் கையாளுதல் பயிற்சி
- 22.09.2013 சமாதான வாரம் கருத்தரங்கு
- 24.09.2013 நூலக பயிற்சிப் பட்டறை
- 26.09.2013 பாடசாலை மேம்பாடுத்திட்டம் சம்பந்தமான கருத்தரங்கு
- 26.09.2013 பிள்ளை நேயம் கருத்தரங்கு
- 08.10.2013 உளவியல் கருத்தரங்கு
- 10.10.2013 அழகியல் (கொலாஜ்)
- 24.11.2013 புவியல் புள்ளி விபரவியல் சம்பந்தமான கருத்தரங்கு
- 28.11.2013 பாடசாலை மேம்பாட்டுத்திட்டம் சம்பந்தமான கருத்தரங்கு
- 02.11.2013 மனைப் பொருளியல் செயற்கை மலர் ஆக்கப் பயிற்சி

H.O.P மாணவர் மட்டச் செயற்பாடுகள் 2013

- 10.03.2013 சதுரங்கப் பயிற்சி
- 02.08.20123 கபடி விளையாட்டுப் பயிற்சி
- 02.08.2013 உடற்பயிற்சி பயிற்சி
- 28.08.2013 நாட்டுக் கூத்துச் பயிற்சி
- 06.07.2013 க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான தமிழ் பாட உதவிக்கருத்தரங்கு
- 21.07.2013 கிறிஸ்தவ மாணவர்களுக்கான நல்லொழுக்கம் சம்பந்தமான கருத்தரங்கு
- 02.08.2013 மனைப்பொருளியல் மாணவர்களுக்கான சலவை இயந்திரம் பாவனைச் செய்முறை
- 19.09.2013 சமாதான வாரம்
- 28.09.2013 நூலக விழப்புணர்வு
- 09.10.2013 உளநலம் பேணல்
- 30.10.2013 க.பொ.த சாதாரண மாணவர்களுக்கான உதவிக்கருத்தரங்கு

மாகாணக்கல்வி அமைச்சின் நிதி -2013

1 EKSP திட்டத்தின் கீழ் NSDG நிதி 175000/= ஒதுக்கீட்டில் எமது பாடசாலையின் மைதானத்திற்கு நடுவில் இடையூறாக இருந்த பாழடைந்த கிணற்றை பாவனைக்குகந்த நிலையாக்கி நிலக்கீழ் மட்டத்திற்கு மூடி அதன் நீரை மாணவர் குடி நீராக்கி அதற்கான குழாய் நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டமை

1. கணித மூலவள நிலையத்தில் உள்ள பயன்படுத்த முடியாத நிலையிலிருந்து அலுமாரிகட்கு கதவுகள் இட்டு சீர் செய்தமை.
2. விஞ்ஞான மேல்மாடி ஒலி, ஒளி அறைக்கு யன்னல் சீலைகள் இட்டமை.

எமது கல்லூரி வேண்டி நிற்கும் இன்றைய தேவைகள்

வினைத்திறனான செயற்பாடுகளுக்கு சிறந்த வளங்கள் அவசியம். துரிதமான வளர்ச்சிப்பாதையில் சென்று கொண்டிருக்கும் எமது பாடசாலையின் சில வளப் பற்றாக்குறைகளும் காணப்படுகின்றன.

1 வகுப்பறைகளுடன் கூடிய கலையரங்கம்
2. மாணவர் ஒன்றுகூடலுக்கான திருத்தி அமைக்கப்பட்ட பிரார்த்தனை மண்டபம்.
3. நவீனத்துவம் வாய்ந்த மனையியல் ஆய்வுகூடம்
4. ஆசிரியர், மாணவர்களுக்கான சிற்றுண்டிச்சாலை
5. ஆசிரியர் ஓய்வறை

முடிவுரை

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும் நிலைபேற்றுக்கும் பேருதவி புரிந்து வரும் பழைய மாணவர் சங்கம் பாடசாலை அபிவிருத்திச்சங்கம், வலயக்கல்வி அலுவலகம், பெற்றோர், ஆசிரியர்கள் , பாடசாலை நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை கூறி இனிவரும் காலங்களில் எமது கல்லூரியின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் நீங்கள் அனைவரும் தோள் கொடுத்து உதவ வேண்டும் என்று வினயமாக கேட்டுக்கொண்டு எமது பாடசாலை சகலதுறைகளிலும் தேசிய ரீதியில் முன்னணிப் பாடசாலையாக திகழ்வதற்கு என்னால் இயன்ற சகல முயற்சிகளையும் வழங்குவேன் என உறுதியளிக்கிறேன். இம்முயற்சிக்கு அனைவரும் துணை நிற்பர் என்ற நம்பிக்கையுடன் இவ்வறிக்கையை இனிதே நிறைவு செய்கிறேன்.

இணைப்பாட விதானச் செயற்பாடுகள்
தமிழ்த் தினப் போட்டி - 2013

தொடர் இல	பிரிவு	நிகழ்வு	முழுப்பெயர்	வலய நிலை	மாவட்ட நிலை	மாகாண நிலை	தேசிய நிலை
01	04	கட்டுரை வரைதல்	உமாசங்கர் சகானா	3			
02		இலக்கணப்போட்டி	பாலச்சந்திரன் நர்மதா	1	1	1	1
03		இலக்கணப்போட்டி	கமலேஸ்வரன் கோபிகா	1	2		
04		பாவோதல்	சோமஸ்கந்தராஜா வைதேகி	1			
05		இசை தனி	பிரபாகரன் தீபிகா	2			
06		இசை தனி	சிவகுமார் சங்கவி	3			
07	தி.போ	சமூகநாடகம்	1.தவராசா தயாளினி	3			
			2.சிவனேஸ்வரன் சிவஸ்திகா				
			3.ரகுநாதன் கிருத்திகா				
			4.தவச்செல்வம் லக்சனா				
			5.இராசலிங்கம் மிதுளா				
			6.குணசேகரம் தேனுகா				
			7.சிவானந்தராசா லோகிர்தா				
			8.மாணிக்கவாசகர் சாகித்திகா				
			9.சுந்தரம் கவுசி				
			10.யோகநாதன் சிவசத்தி				
			11.தவயோகராஜா வாசுகி				
			12.இரத்தினகுமார் விதுர்ஷா				
08	தி.போ	வில்லுப்பாட்டு	1.சோமஸ்கந்தராஜா வைதேகி	2			
			2.இரத்தினவேல் சத்தியா				
			3.அருளானந்தம் அனுசியா				
			4.நாகேந்திரம் துசிகா				
			5.இராஜேஸ்வரன் கலைவாணி				
			6.வெற்றிவேல் ஜீவிதா				
			7.லோகநாதன் கிரிசாந்தி				
09	தி.போ	தமிழ்றிவு	1.கமலேஸ்வரன் கோபிகா	1	1	2	
			2.நாகமுத்தன் தனுஜாஜினி				
			3.பொன்னையா வினோதராணி				
			4.தெய்வேந்திரம் சுகிர்தா				
			5.தங்கவேல் சர்மிளா				
10	தி.போ	விசேட கூத்து	1.விக்னேஸ்வரன் வினிதா	1	1	1	
			2.மகாதேவன் தேனுஷா				
			3.பவிகரன் பிரம்மியா				
			4.சசிகுமார் சஞ்சிகா				
			5.சீவரத்தினம் விதுஷா				
			6.நந்நகுமார் அனித்தா				
			7.கேதீஸ்வரசர்மா சுதாத்மிகா				
			8.முரளிதரன் நிவேதினி				
			9.தவயோகராசா வானதி				
			10.சிவகுமார் சங்கவி				
			11.கமலசீலன் கதுஷா				
			12.யோகராஜா நித்தியா				
			13.வேலாயுதம் சிவதர்சினி				
			14.கலாமோகன் காயத்திரி				
			15.ரவி சிந்துஜா				
			16.சிவதாஸ் நிறோஷா				

2. ENGLISH DAY COMPETITION – 2013

S.No	year	EVENT	Full NAME	Zonal Level	Provincial Level
01	8	Recitation	Puvaneswaran Sumitha	1	
	8		Vamathevan Jeyamithila	1	
	9		Sundaramoorthy Nithiyapoopathy	3	
02	7	Dictation	Manivannan Sankavi	1	
	8		Venugopalavanithasan Jatheeshvariya	1	
	10		Subenthiran vijenthini	2	
	12		Chandramohan Dilogi	1	
03	12	News Reading	Karunakaran Rubiny	1	
04	12	Oratory (pre)	Chandramohan Dilogi	3	
05	7	Creative writing	Venukopalavanithasan Yuwasthika	2	
	8		Puvaneshwaran Sumitha	3	
06	13	Copy writing	Karunakaran Sangeetha	1	
07		Open Drama	Kulanayakam Abitharani	1	
			Esvarapatham Vijithra		
			Ganesalingam Athirai		
			Rangaraja Mithila		
			Jeyakumar Nalayini		
			Sivanathan Sambaki		
			Ravindran Kajalvili		
			Thavalingam Sarsayini		
			Jeganathan Pavithra		
			Raveenthiran Sinthuja		
			Atputharaja Pavatharani		
			Thurairaj Thusanthi		
08	6	Role play	Ananthan Pirathiksa	3	
			Sankavi Kandiah		
			Mathusika Mahendraraja		
			Abinaya Sritharan		
			Sulaxi Sureshlingam		
			Sriransika Thavaselvam		
09	7	Role play	Venugopalavanithasan Yuwasthika	1	
			Manivannan Sangavi		
			Senthilrasa Hamsayini		
			Krishnaraya Najitha		
			Chenthooran Thevaki		
			Amalathas Diluxana		
10	8	Role play	Vamathevan Jeyamithila	1	3
			Puvaneshwaran Sumitha		
			Kumarasuwamy Sowmiya		
			Sivasenthinathan Kamsayini		
			Sivakumar Emilsiya		
11	9	Role play	RavikumarRajintha	2	
			Sundaramoorthy Nithyapoopathy		
			Kobalakrishnan Thusikka		
			Karunanithi Tharsini		
			Sritharan Abivarna		
12	10	Role play	Sivathasan Thurca	3	
			Thayaparan Rammiya		
			Sarveswaran Thivisha		
			Vathanaruban Mathumai		
			Sivakumar Sangavi		

13	11	Role play	Partheepan Piraveena	3	
			Umasankar Sahana		
			Balachandran Narmatha		
			Rasalingam Mithila		
			Senthilrasa Sarmini		
			Gnanasegaram Tharsini		

மெய்வல்லுனர் போட்டிகள் 2013

பெருவிளையாட்டுக்கள்

தொடர் இல	நிகழ்ச்சி	வயதுப்பிரிவு	வலயம்	மாவட்டம்	மாகாணம்
01	கபடி	15	2ம் இடம்	பங்குபற்றியமை	
		19	3ம் இடம்	பங்குபற்றியமை	
02	உதைப்பந்து	19	2ம் இடம்	பங்குபற்றியமை	
03	வலைப்பந்து	15	2ம் இடம்	பங்குபற்றியமை	
		17	1ம் இடம்	பங்குபற்றியமை	
		19	1ம் இடம்	பங்குபற்றியமை	
04	துடுப்பாட்டம்	19	பங்குபற்றியமை		
05	உடற்பயிற்சி	19	பங்குபற்றியமை		
06	சதுரங்கம்	19	3ம் இடம்		
07	பூப்பந்து	15	3ம் இடம்		பங்குபற்றியமை
08	மேசைப்பந்து	15	3ம் இடம்		பங்குபற்றியமை
		19	3ம் இடம்		பங்குபற்றியமை

மெய்வல்லுனர் போட்டிகள் 2013

தொடர் இல	பெயர்	வயதுப்பிரிவு	நிகழ்ச்சி	வலயம்
01	P.பிரதிஷா	13	நீளம் பாய்தல்	1
02	B.யதுகிரி	15	நீளம் பாய்தல்	1
03	S.மலர்வாணி	17	100m	2
			நீளம் பாய்தல்	2
			முப்பாய்ச்சல்	3
04	S.சுரேக்கா	15	நீளம் பாய்தல்	2
05	A.சிந்துரூபி	19	3000m	3
06	B.பாருஷா	13	உயரம் பாய்தல்	2
07	P.விதுர்சனா	15	நீளம் பாய்தல்	2
08	R.மதுஷா	15	குண்டெறிதல்	3
09	P.தீபராணி	15	தட்டெறிதல்	3

பொதுப் போட்டிகள் - 2013

இல	விடயம்	பிரிவு	நிகழ்ச்சி	மாணவர் பெயர்	இடம்	மட்டம்
01	தேசிய கலை இலக்கியப் போட்டி	4	கவிதைப்பாடல்	சி.சங்கவி	2	தேசிய மட்டம்
02	தேசிய வீடமைப்பு அதிகார சபை	மத்தியபிரிவு	கட்டுரை	வே.ஐதீஸ்வர்யா	2	தேசிய மட்டம்
03	The Royal Society of Chemistry	மேற்பிரிவு	கட்டுரை	1. க.கீதாஞ்சனா	MERIT	தேசிய மட்டம்
				2. ம. சாருஜா		
				3. கோ. தர்மிக்கா		
				4. க.கிருஷாயினி		
				5 வி.ஜானுஷா		
				6 வா.தக்சாயினி		
				7 இ.மாதுளி		
04	பொதுநலவாய உச்சிமகாநாடு	மத்தியபிரிவு	கட்டுரை	வே.ஐதீஸ்வர்யா	3	மாகாணமட்டம்
05	சிறுபான்மையினருக்கான மொழி உரிமையை மேம்படுத்தல	மத்தியபிரிவு	கட்டுரை	அ.அனுஷா	1	மாவட்டமட்டம்
06	கூட்டுறவு	மேற்பிரிவு	பேச்சு	வ.மாதுமை	3	மாவட்டமட்டம்
07	சிறுவர்தினம்	மேற்பிரிவு	பேச்சு	பா.நர்மதா	3	வலயமட்டம்
08	முதியோர் தினம்	மத்தியபிரிவு	கட்டுரை	கு.யதுசா	2	வலயமட்டம்
		மேற்பிரிவு	கவிதை	வ.உதயப்பிரியா	2	வலயமட்டம்
09	மாற்றுவலுவுடையோர்	கீழ்ப்பிரிவு	பேச்சு	த.சுமித்திரா	2	வலயமட்டம்
		மத்தியபிரிவு	கவிதை	ரா.ரனுசா	2	வலயமட்டம்
		மேற்பிரிவு	கட்டுரை	க.விதுசா	1	வலயமட்டம்
10	நல்லொழுக்கம்	மத்தியபிரிவு	பேச்சு	சி.சங்கவி	1	வலயமட்டம்
		மத்தியபிரிவு	கவிதை	பா.பிரவீனா	3	வலயமட்டம்
		மேற்பிரிவு	பேச்சு	சோ.வைதேகி	1	வலயமட்டம்
		மேற்பிரிவு	கட்டுரை	லோ.கிருசாந்தினி	2	வலயமட்டம்
		மேற்பிரிவு	கவிதை	அ.அனுசா	2	வலயமட்டம்

விஞ்ஞான வினாடிவினா – 2013

S.No	year	EVENT	Full NAME	Zonal Level	Provincial Level
01	7	Science quiz	Senthilrajah Hamshajini	1st	
02	11	Science quiz (Eng)	Umashankar Sahana	2nd	1st

வணிகப் போட்டிகள் 2013

S.No	year	EVENT	Full NAME	Zonal Level	Provincial Level
01	10	பேச்சு	மாதுமை வதனரூபன்	1	
02	11	பேச்சு	யதுஷா இராசட்ணம்	2	
03	A/L	பேச்சு	சரணியா சதீஸ்குமார்	3	
04	A/L	கட்டுரை	தாட்சாயினி ஜெகநாதன்	5	
05	10	குறுவினா	விஜித்திரா ஈஸ்வரபாதம்	1	3
06	11	குறுவினா	நர்மதா பாலேந்திரன்	2	
07	A/L	குறுவினா	காயத்திரி மகேந்திரன்	1	
08	A/L	குறுவினா	நிஜந்தி இராசரட்ணம்	2	3

கணிதப்புதிர்ப்போட்டி

S.No	year	EVENT	Full NAME	Zonal Level	Provincial Level
01	7	ஆங்கில மொழிமூலம்	Venugopalavanithasan Yuwasthika	1	
02	8	ஆங்கில மொழிமூலம்	Venugopalavanithasan Jatheesvariya	3	

திருக்குறள் போட்டி

தொ. இல	வகுப்பு	நிகழ்வு	பெயர்	வலயம்
1	6-7	திருக்குறள் மனனம்	ச. அபிராமி	4
2	8-9	திருக்குறள் மனனம்	வா. ஜெயமிதிலா	1
3	12-13	திருக்குறள் மனனம்	மு. சத்தியதேவி	1

சமூக விஞ்ஞானப் போட்டி

தொ. இல	வகுப்பு	நிகழ்வு	பெயர்	வலயம்
1	9	ஆங்கிலமொழிமூலம்	ரவிக்குமார் ரஜிந்தா	3

இரண்டாம் மொழி (சிங்களம்)

தா. இல	வகுப்பு	நிகழ்வு	பெயர்	வலயம்
1	6	வாசிப்பு	V.சோபனா	2
2	6	பேச்சு	R.தூயவானி	2
3	7	பேச்சு	கம்சாயினி சிவசெந்திநாதன்	1
4	7	பேச்சு	ஜெந்துகா பாலச்சந்திரன்	2
5	9	பேச்சு	N.துவாரகா	3
6		குழுப்பாடல்	தீபிகா பிரபாகரன்	1
			கல்யாணி ஜெயதாஸ்	
			றொசானி கணேஸ்வரன்	
			கீர்த்தனா ராஜன்	
			செந்துஜா சந்திரசேகரன்	
			வைஸ்ணவி இரத்தினகுமார்	
			வினித்தா தெங்காதரன்	
			ஜதிஸ்வரியா வேணுகோபாலவாணிதாசன்	

பழையமாணவர் சங்க கொழும்புக்கிளையினூடாக ரூபா 85000 /= ஞாபகார்த்த நிதியாகவும் அன்பளிப்பாகவும் வழங்கப்படுகின்றன.

க.பொ.த (உ.த) பிரிவில் திறமைச்சித்தி பெற்றமாணவர்களுக்கான ரூபா 3000/= ஞாபகார்த்தப்பரிசு

கணிதப்பிரிவு – வழங்குபவர் செல்வி சோபனா பாலச்சந்திரன் திருமதி செல்லம்மா குமாரசுவாமி ஞாபककார்த்தப்பரிசு

உயிரியல் பிரிவு - வழங்குபவர் ஜமுனா கணேசலிங்கம் (Dr ஸ்ரீபத்மநாதன் ஞாபகார்த்தம்)

வர்த்தகப்பிரிவு ,கலைப்பிரிவு – வழங்குபவர் திருமதி வள்ளி சூரியகுமாரன் (Prof சூரியகுமாரன் ஞாபகார்த்தம்)

க. பொ.த (உ.த) பாடரீதியாக **A** தரம் பெற்ற மாணவர்களுக்கு 22 மாணவாகளுக்கு ரூ 1000/- ஞாபகார்த்தப்பரிசாக வழங்கப்படுகின்றது. (கொழும்பு , கனடா ,அவுஸ்ரேலியா ப.மா.ச)

இணைந்த கணிதம்	02 மாணவர்கள்	ஞானாம்பிகை ஞாபகார்த்தமாக, கனடா ப.மா.ச
இரசாயனவியல்	02 மாணவர்கள்	திரு வி ராதாகிருஷ்ணன் ஞாபகார்த்தமாக, ப.மா.ச கனடா
பௌதீகவியல்	01 மாணவிக்கு	திரு K. துரைசிங்கம் ஞாபகார்த்தமாக
கணக்கீடு	03 மாணவர்கள்	திரு A. சிவக்கொழுந்து ஞாபகார்த்தமாக, கனடா ப.மா.ச
பொருளியல்	01 மாணவிக்கு	திரு C. கிருஷ்ணபிள்ளை ஞாபகார்த்தமாக
அரசியல்	01 மாணவிக்கு	திரு ஈசுருவரபாதம் ஞாபகார்த்தமாக
		வரலாறு 03 மாணவர்கள்திருமதி ஆறுமுகம் மகேஸ்வரஞாபகார்த்தம், அவுஸ்லேரியா ப.மா.ச
தமிழ்	01 மாணவிக்கு	திரு DR ராஜேந்திரம் ஞாபகார்த்தமாக
இந்துநாகரிகம்	01 மாணவிக்கு	திரு S. சிவகுருநாதன் ஞாபகார்த்தமாக
பொது சாதரணம்	01 மாணவிக்கு	திரு C. கார்த்திகேசு ஞாபகார்த்தமாக
பொது ஆங்கிலம்	02 மாணவர்கள்	திரு K. பாலசுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக, திரு கார்த்திகேசு பத்மநாதன் ஞாபகார்த்தமாக

பல்கலைக்கழகம் செல்கின்ற 16 மாணவர்களுக்கு 16000/= அவுஸ்ரேலியா பழைய மாணவர்சங்கத்தால் வழங்கப்படுகின்றது.

விசேட தேவையுள்ள மாணவிக்கு பகவதி பாலசுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக ரூபா 10000 திருமதி சுகந்தி கிருபாகரன் அவர்களால் வழங்கப்படுகிறது.

க.பொ.த (சா.த) சிறந்த பெறுபேறு **(9A)** பெற்ற இரு மாணவர்களுக்கு தலா 3000 ரூபா வழங்கப்படுகின்றது.

1. தமிழ் மொழி மூலம் - திரு கணேசலிங்கம் ஞாபகார்த்தமாக திருமதி ஜமுனா கணேசலிங்கம் அவர்களால் வழங்கப்படுகிறது.
2. ஆங்கில மொழிமூலம் - திரு கணேசலிங்கம் ஞாபகார்த்தமாக திருமதி ஜமுனா கணேசலிங்கம் அவர்களால் வழங்கப்படுகின்றது.
3. க.பொ.த (சா.த) (8A) பெற்ற ஒரு மாணவிக்கு 2000/= வீதம் திரு கணேசலிங்கம் ஞாபகார்த்தமாக திருமதி ஜமுனா கணேசலிங்கம் அவர்களால் வழங்கப்படுகிறது.
4. க.பொ.த (சா.த) (7A) பெற்ற மூன்று மாணவர்களுக்கு தலா இரண்டாயிரம் பழைய மாணவர்சங்கம் கனடாக் கிளையினால் வழங்கப்படுகின்றது.
5. தரம் 8 தரம் 11 ஆகிய வகுப்புகளில் ஆங்கிலத்தில் சிறந்த மாணவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா அவுஸ்ரேலியா பழைய மாணவர் சங்கத்தினால் வழங்கப்படுகின்றது.
6. .தரம் 6 வகுப்பில் கணிதத்தில் சிறந்த மாணவர்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா திரு மணி ஞாபகார்த்தமாக கனடா பழையமாணவர்சங்கத்தால் வழங்கப்படுகின்றது,

7. விளையாட்டுத்துறையில் சிறந்த மாணவிக்காக ரூபா ஐயாயிரம் திருமதி வேலாயுதம் ஞாபகார்த்தமாக திரு V. ராதாக்கிருஷ்ணன் அவர்களால் கனடா பழைய மாணவ சங்காத்தூடாக வழங்கப்படுகின்றது. மாணவர் தலைவிக்கான அன்பளிப்பு ரூபா ஆயிரம் திருமதி லோகநாயகி குமாரசாமி (கொழும்பு ப.மா.ச)அவர்களால் வழங்கப்படுகின்றது.
8. க.பொ. த.(உ/த) கணிதப்பிரிவு 3A பெற்ற மாணவிக்கு 5000/= திருமதி இராஜசிங்கம் அவர்களால் கொழும்பு பழைய மாணவசங்கத்துக்கூடாக வழங்கப்படுகிறது.

பரிசளிப்பு ஒழுங்கு அனுசரணை வழங்கியோர் விபரம்

உணவு சிற்றுண்டி குளிர்பானம்

1. திரு சின்னத்தம்பி சிவகுமார் உணவகம் வவுனியா
2. திருமதி பொன்மலர் விக்னேஸ்வரராஜா பழையமாணவி
3. திரு அ. தெய்வேந்திரராஜா பிரபல வர்த்தகர்
4. ரவி ஆட்ஸ் கட்டிட ஒப்பந்தக்காரர்
5. திரு இ.தமிழழகன் பிரபல வர்த்தகர் நெல்லியடி
6. திரு ந. சிவலிங்கம் PEC தனியார் கல்வி நிலையம்
7. திருமதி சா. குகனேசன் ஆசிரியர்
8. திருமதி அ. சுஜீவன் ஆசிரியர்
9. திரு. மா. மதிதாஸ் ஆசிரியர்

பரிசளிப்பு விழா நினைவுப்பரிசில்

திரு சி. கலீபன் Esoft computer studies Nelliady

பாரிசளிப்பு விழா ஏனைய பரிசில் பொருள் அனுசரணை

திரு பா. பிரதீபன் கட்டிட ஒப்பந்தக்காரர் மாணவர் கற்றல் சாதனம்

திருமதி ஜெயக்குமாரி தயாநிதி சிறப்புப்பரிசில்

திரு கிருஷ்ணபிள்ளை பரமேஸ்வரன் ஞாபகார்த்தபரிசு

திருமதி பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை சிறப்புப் பரிசு

செல்வி சௌபாக்கியவதி ஞாபகார்த்தப் பரிசு

பாமதி ஞாபகார்த்தப்பரிசு

சிதம்பரபிள்ளை புத்தகச்சோலை நெல்லியடி

செல்லமுத்தூஸ் புடவைமாளிகை நெல்லியடி

திரு ஆனந்தசிறி கட்டிட ஒப்பந்தக்காரர்

திருமதி பாமதி தவலிங்கம் முகாமையாளர் தேசியசேமிப்பு வங்கி நெல்லியடி

கல்லூரிக்கீதம்

பல்லவி

வடஇந்து மங்கையர் கல்லூரி
வாழிய வாழி நீடுழி

அனுபல்லவி

ஆழியிறைவன் அருள் நிதம் பாடி
பாழ்வினை யகலப் பரிவுடன் பயிலும் (வட)

சரணம்

ஈழநன் நாடாம் எங்கள் பொன்னாட்டில்
திருவளர்ந் தோங்கிடும் பருத்தித்துறையாம்
தாழ்விலாத்தலத்தில் தவநெறிச் சங்கம்
தமிழ் மகள் மாண்புறத் தரணியி லருளிய (வட)

செந்தமிழ் முதலாம் சிறந்த நற்கலையும்
சிந்தையை யேற்றும் நந்திரு மறையும்
எந்தத்துறையிலும் தேர்ந்திடப் பயிற்சி
தந்திடும் தர்மம் தனதெனச் சாற்றும் (வட)

மங்கையர் பண்பும் இங்குநாம் பயின்று
நங்குலம் தழைக்க நாடும் செழிக்க
பொங்கிடு மன்பும் மங்கிடா வீரமும்
எங்கணும் சேவைகள் செய்திட வளரும் (வட)

பன்னரும் பெருமைசேர் பரந்தநல் விண்ணே
பரிதியும் மதியு மின்றேல் இருட்புண்ணே
அன்பெனும் நிலவை பொழிபவள் பெண்ணே
இன்பக் கதிரொளி காட்டிடுங் கண்ணே
நன்மணி விளக்கே மாற்றுயிர் பொன்னே
மன்னுயிர் சேவையை தன்னுயிரென்னும் (வட)